புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்

ரெ.மோ.டில்லி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை -600117

முனைவர் யு.துர்காதேவி
உதவிப்பேராசிரியர் & நெறியாளர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை -600117

ஆய்வுச்சுருக்கம்:-

" யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம் 192)

என்னும் கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப நம்முடைய சங்க இலக்கியங்களில் காதல்,வீரம்,கொடை,பண்பாடு,பழக்கவழக்கங்கள் ,வாழ்வியல் நெறிமுறைகள் முதலியவை பெரும்பாலும் போற்றப்படுபவை.

"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" புறம்(312)

நம் முன்னோர்கள் கடைபிடித்த வாழ்வியல் நெறிமுறைகளே பாண்பாடு. அதை நாம் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பது நம் அனைவருடைய கடமையாகும்.

## முன்னுரை

சங்கத்தமிழ் இலக்கியத்தில் காதல்,வீரம், கொடை மட்டுமன்றி இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன. விருந்தோம்பலில் தமிழரே பேர் பெற்றவர்கள் பழந்தமிழ் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர்நாடியாக கொண்டவை.ஏனென்றால் நம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமகிழ்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் தங்குவதற்கு இடமும் கொடுத்து அன்பு பாரட்டுவதே விருந்தோம்பல். இத்தகு விருந்தோம்பல் பற்றி இங்கு காண்போம்.

## தொல்காப்பியத்தில் விருந்தோம்பல் பங்கு

"விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்,செய்யுளியல்.231)

விருந்து என்பது புதுமை.அதாவது உறவினர் வேறு,விருந்தினர் வேறு. நம் வீட்டுக்கு வரும் முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். மனைவிக்கு சிறந்த மாண்புகளையும், விருந்தோம்பலையும் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள்" (கற்பியல்11)

## தமிழ் இலக்கியத்தில் விருந்தோம்பல்:-

அக்காலத்தில் விருந்தினர்க்கெனத் தனியாகச் சிறந்த முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டன. தினை,வரகு,சாமை,குதிரைவாலி போன்றஆரோக்கியமான உணவுகள் விருந்தினர்க்கு அளிக்கப்பட்டன.

"அமிழ்தன மரபின் ஊன்துவை அடிசில் வெள்ளி வெண் கலந்து ஊட்டல் அன்றி" (புறம்:390:17-18)

இறைச்சி கலந்த உணவை வெள்ளியாலான வெண்கலத்தில் தந்து உண்பித்தான் என்கிறது புறநானூறு.

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம்இயைவதாயினும்,

இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே......புறம்,182.
அமிழ்தமே ஆனாலும் தாம் மட்டும் உண்ணாது பிறருக்கும் கொடுப்பர். நல்லோர் அத்தகையோரால் தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது .என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.தன் வீட்டில் வறிய நிலையாக இருந்தாலும் விருந்தினர்க்கு உணவு அளித்து மகிழ்வர் நம் முன்னோர்கள். தானியம் ஏதும் இல்லாதிருப்பின் வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு தலைவி குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்.

“விருநர் வரையார் வார வேண்டி விருந்த
கண் மாறாது உண் இய பாசவர்
ஊனத்த வால் நிணக்கொழுங்குறை
குய் இடு தோறும் ஆனாது ஆர்ப்பக்
கடல்ஒலி கொண்டு ,செழுநகர் வரைப்பின்
நடுவன் எழுந்த அடுநெய் அவுதி". என்று பதிற்றுப்பத்து (8-14)

அரண்மனைக்கு நடுவில் விருந்துணவு சமைக்கப்பட்டது. நெய் ஊற்றிச் சமைக்கப்பட்டது. அதனால் அதற்கு அடுநெய் ஆவுதி என்று பெயரும்வந்தன.கறி வெட்டும் பாசவர் ஊன்கறியை வெட்டி சமைத்து விருந்தினர் வேண்டியவர், வேண்டாதவர் அனைவருக்கும் உணவு அளித்து மகிழ்ந்தார் குட்டுவன் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றன.

நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் மரபு பண்டைய தமிழருக்கு உண்டு, இதனை

"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்". நற்றிணை(142))

அக்காலத்தில் விருந்தினர் வீட்டுக்கு வந்து செல்லும் போது அவர்களோடு பின் சென்று வழி அனுப்பும் வழக்கமும் உண்டு. இதனை

“காலின் ஏழடிப்பின் சென்று"
(பொருநராற்றுப்படை,166)

“அன்னாய்! இவன் ஓர் இளமாணாக்கன்
தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்ப மேனியொடு
விருந்தின் ஊரும் பெருங் செம்மலனே".(குறுந்தொகை .33 )

பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்ற கலைவளர் செம்மல்களைப்போற்றி பாதுகாத்துள்ளனர்.கலைஞர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தச் செல்லும் இடங்களில் விருந்து உபச்சாரங்களைப் பெற்றுள்ளனர்.இதனை ஆற்றுப்படை இலக்கியம் பதிவுசெய்துள்ளதைப் போன்றுஅகஇலக்கியமும் பதிவுச்செய்துள்ளது.

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்
(இல்லறவியல் 84)

இனிய முகத்தோடு விருந்தினரைப் பேணுபவரின் வீட்டில் திருமகள் என்னும் செல்வம் என்றும் நிலைத்திருக்கும் என்று வள்ளுவர் குறிப்பிடுக்கிறார்.

விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (இல்லறவியல் 82)

விருந்தினர் வீட்டிற்கு வெளியே இருக்க தான் மட்டும் உண்பது . சாவைத் தடுக்கும் மருந்தாக இருந்தாலும் தான் மட்டும் உண்பது விருப்பதக்கது அன்று. கரிகால் பெருவளத்தான் மன்னராக இருந்த காலத்தில் தன்னை நாடி வரும் பெருநர்,இரவலராக இருந்தாலும் அவரைப் பெரிதும் மதித்து போற்றுவார். இறைச்சியின் வெப்பத்தை ஆற்றும் பொருட்டு வாயின் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமும் , வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமும் மாறி மாறி மெல்ல முடியாமல்வாய்க்குள்ளேயே ஆற வைத்து உண்டனர். பல்வேறு பிழுங்கி போயின கொல்லையை உழும் கொழு உழுது உழுது தேய்ந்ததைப் போல உபசரித்து அவர்கள் இறைச்சியை மென்று மென்று பல்லும் மழுங்கிப் போயின இதனை,

"கொல்லை உழுகொழு ஏய்ப்ப,பல்லே எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி" . (பொருநராற்றுப்படை.117-118)

" விருந்தினரைப் புறம் தருதல்” என்று பரிமேலழகரும்,

*"உண்ணும் காலத்து புதியோர் வந்தால் பகுத்துண்ண வேண்டும்" என்று மணக்குடவரும் கூறியுள்ளார்*

*"நல்விருந்து ஓம்பலிம் நட்டாளாம்;வைகலும்*
*இல்புறம் செய்தலின் ஈன்றதாய்– தொல்குடியின*
*மக்கள் பெறலின் மனைக்கிழத்தி ,இம்மூன்றும்*
*கற்புடையாள் பூண்ட கடன். - திரிகடுகம்(64)*

*நல்ல விருந்தினரைப் பேணி பாதுகாப்பது மனைவிற்குரிய பணியாகும். இல்லறத்தை வழுவாது நடத்துபவள் தாய்,தன் பழமையான குடும்பம் விளங்குவதற்குரிய மக்களைப் பெறுவதனால் மனையாள். இம்மூன்றும் கற்புள்ள மனைவி கொண்ட கடமையாகும்.*

*பண்பாடு விளக்கம்*
*''பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'' (கலித்தொகை).*
*பண்பாடு என்ற சொல்லைப் பிரித்தால் பண்+பாடு பண்-இசை இவ்வாறு நம் வாழ்க்கையொடு தொடர்புடையது.*
*''கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை*
*மார்க்கத்தன வென்பது'' இது பேராசிரியர் உரை(2)*
*விருந்தோம்பல் பற்றி திடுகடுகம்*

*சீலன் அறிவான் இளங்கிளை: சாலக்*
*குடி ஓம்ப வல்லான் அரசன்: வடு இன்றி*
*மாண்ட குணத்தான் தவசி:- என மூவர்*
*யாண்டும் பெற்றற்கு ஆசிரியர். (13)*

*பலதரப்பட்ட மக்களின் குணத்தை அறிந்து அவர்களை காக்கும் அரசனே சிறந்த துறவி இம்மூவரும் பெறுதற்கு அரியர் ஆவர்.*

*தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்,*
*வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணாதான்*
*கோளாளன் என்பான் மறவாதான்:- இம்மூவர்*
*கேள் ஆக வாழ்தல் இனிது. (12)*

*முயற்சியுடையவன் எந்த சூழ்நிலையிலும் கடன்படாது வாழ்பவன்.பிறருக்கு உதவி செய்பவன் விருந்தினர் பசித்திருக்க உண்ணாதவன்.பிறர் செயல்களை அறிபவன் கேட்டவற்றை பறவாதவன் இம்மூவருடனும் நட்பு கொள்ளுதல் நன்மை தருவதாகும்.*

*தலைவியின் சிறப்பு*

*மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்,மாசுஇல் சீர்ப்*
*பெண்ணினுள் கற்புடையாள் –பெற்றானும், உண்ணுநீர்க்*
*கூவல்குறை இன்றித் தொட்டானும்:-இம்மூவர்*
*சாவா உடம்பு எய்தினர்.(திரிகடுகம் 16)*

*மண்ணுலகில் புகழை அடைந்தவனும், கற்புடைய மனைவியை பெற்ற கணவனும்,கிணறுகளைத் தோண்டி வைத்தவனும்,எக்காலத்திலும் அழியாத புகழைப் பெற்றவராவார்,அவர் இறந்தாலும் அவர் புகழ் நிலைத்து நிற்கும். தலைவியோ தலைவனுக்காகச் சமையல் செய்கிறாள்.''கட்டித் தயிரைத்தன் காந்தள் விரல்களால் பிசைந்து,தன் சேலையினை கைகளால் சரிசெய்து கொண்டு குவளைக் கண்கள் தாளிப்புப் புகையினைக் கொள்ளவும்,தயிர்க்குழம்பும்,புளிக்குழம்பு வைத்து கணவனுக்கு பரிமாறும் போது அவர் இனிது எனப் பாராட்டிக் கூறி மகிழ்ந்து உண்டான்.இதனைக் கண்ட தலைவியின் முகம் இளநகை போல் தோன்றியது. இதனை*

*முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇ*
*குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்*
*தான் துழந் தட்ட தீம்புளிப்பாகர்*
*இனிதெனக் கணவன் உண்டலின்*
*நுண்ணீதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே குறுந்தொகை(167)*

*“இம்மை மாறி மறுமை யாயினும்”*

*குறுந்தொகை 49(3-5)*

*மனைவி இப்பிறவியில் தனக்கு வாய்த்த கணவனே மறுபிறவியிலும் கணவனாக அமைய வேண்டும் என்று விரும்பிக் கூறுகிறாள்.*

*விளையாட்டு:-*

*நெய்மாண் சிவிறியர் நீர்மணக் கோட்டினர்*
*வெண்கிடை மிதவையர் நண்கடைத் தேரினர். (சுவாமிநாத ஐயர் 1987)*

*பண்டையத் தமிழரின் வாழ்வில் விளையாட்டு சிறப்பிடம் பெற்றிருந்தது.*
*இருபாலரும் அருவிகளில் நீராடினர். ஆற்றங்கரையில் பெண்கள் கழங்கு பந்து விளையாடி மகிழ்ந்தனர்.*

*பல்லாங்குழி – இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணம் வளர.............*

*பரமபதம் - ஏற்றம்,இறக்கம் இரண்டும் இருப்பதே வாழ்கை என்பதை உணர்த்த ....*

*கில்லி – கூட்டல்,பெருக்கல் கணக்கைக் களிப்புடன் மகிழ்ந்து கற்க.....*

*தாயம்- வெட்டி வெளியே எறிந்தாலும் மீண்டும் முயன்று தொங்கி முன்னேற...*

*சதுரங்கம் - இதர வழி இல்லாதபோதும் இறுதிவரை போராடும் உறுதி மனம் பெற...*

*நொண்டி - சமமாக இல்லாதபோதும் சாதிக்கத் தூண்டும் சக்தியைப் பெற...*

*கண்ணாமூச்சி – ஒளிந்து இருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கான பொறுமையையும்,தானே ஒளிந்து மகிழ்ந்து இருக்கும் பெருமையையும் பெற...*

*ஈகை பண்பு:-*

*“மாரியொன் நின்றி வறந்திருந்த காலத்தும்*
*பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்*
*பொன்தந்து கொண்டு பகாவாக நல்கினாள்*
*முன்றிலோ இல்” பழமொழி நானூறு (381)*

*அதாவது மழை பொழியாது வறண்ட காலத்தில் கூட பாரியின் மகள் தன்னை இரந்து நின்ற பாணனுக்கு சோறு அளித்தாள்.ஆதலால் இரந்தால் ஒன்றும் கிடையாது போகிற வீட்டு முற்றம் என்பது உலகில் எதுவும் இல்லை.*

*வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகைமற்று எல்லாம்*
*குறியெதிர்ப்பை நீரது உடைத்து (221)*

*அதாவது இல்லை என்று வருபவர்க்கு அள்ளி கொடுப்பதே ஈகை என்றார் வள்ளுவர் ..*

*அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை*
*பெருங்கல் நாடன் பேகனும் (புறம் 158)*

*தமிழ் இலக்கியங்களில் கடையேழு வள்ளல்களை பற்றி படித்தை நினைவுக் கூர்வோம்.பாரி,பேகன்,அதியமான்,காரி,ஓரி,ஆய்,நள்ளி.இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோரிடத்தில் வாழ்ந்தவர்கள்.தன்னை நாடி வருபவரை வரவேற்று உபசரித்து பொருட்களை வழங்கி இன்புறுவர். அதியமான் தனக்கு கிடைத்த சாவா மருந்தாகிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்தது அவரது கொடைத்திறமையைக் காட்டுகிறது.*

*கட்டிடக்கலை:-*

*கட்டிடக்கலைக்கு மிக சிறந்த எ.கா தஞ்சை பெரிய கோவில் 1987-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி. பண்பாட்டு நிறுவனத்தால்(UNESCO) உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்தது. நம் தமிழரின் கட்டிக்கலையின் பெருமையை விளக்குகிறது.*

*சிற்பக்கலை :-*

*“கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்*
*மண்ணும் சதையும் தந்தமும் வண்ணும்*
*கண்ட சுருக்கரை மெழுகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன”.*
*என்பது திவாகர நிகண்டு(1)*

ஓவியக் கலை:-

காவிரிப்பூம் பட்டினத்தில் உவவனம் என்னும் அழகிய பூஞ்சோலையின் இயற்கைக்காட்சி ,ஓவியன் எழுதிய சித்திரப் படம் மிக அழகாக இருந்தது என்று மணிமேகலைக் காவியத்தில் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்:

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர செய்கைப் படாம் போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய உவவனம்"

நக்கீரர் பாடிய நெடுல்வாடையிலும் பாண்டியனுடைய சித்திர மாடம் கூறப்படுகிறது.

"வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீ இ
மணிகண்டன்ன மாத்திரட்டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்"

என்று அவர் சித்திர மாடத்தை வருணிக்கிறார்.

வீரக்கலைகள் :-

பண்டைய தமிழர்களின் வீர விளையாட்டுகளான சிலம்பாட்டம், ஜல்லிக்கட்டு, மற்போர், கபடி, வில்வித்தை, வழுக்குமரம் ஏறுதல் முதலியவை பற்றி சங்கஇலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

திருவிழா :-

கிராமங்களில் இன்றும் அதிக அளவில் திருவிழாக்கள் வெகு விமர்சியாக கொண்டாடப்படுகிறது. கிராமங்களை விட்டு நகரங்களின் இடம்பெயர்தாலும் திருவிழா காலங்களில் அனைவரும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து உணவை பரிமாறி கொண்டு உண்ணுவர். உற்றார் உறவினருடன் ஒன்று கூடி திருவிழாவிற்கு செல்வர். அங்கு விற்கும் பொம்மைகள்,பஞ்சுமிட்டாய், தின்பண்டங்கள்,அலங்கார பொருட்கள் வாங்கி மகிழ்வர். பிறகு பொய்க்கால் குதிரை ,வானவேடிக்கைகள் ,ரதங்கள் ,அம்மன் ஊர்வலம் முதலியவற்றை கண்டு மகிழ்வர்.

தமிழ்நாட்டு பண்பாடு:-

ஆடை அணிதல் ,உணவுமுறை ,பழக்க வழக்கங்கள் ,நம்பிக்கை ,வழிபாடு ஆகியவற்றில் தமிழர்களுக்கு என சில தனித்தன்மை அமைந்துள்ளது. ஆடவர் வேட்டி அணிதல், தலைப்பாகை அமைத்தல் ,இளம் மங்கையர் தாவணி அணிதல் ,முகத்தில் மஞ்சள் பூசுதல், திருமணத்தின்போது கணவன் மனைவிக்குத் தாலி கட்டுதல் முதலியன தமிழர்களுக்குரியவை இக்கூறுகள் தமிழ்நாட்டுப் பண்பாட்டை வெளிப்படுத்துவன.

முடிவுரை

பண்டையத் தமிழிரின் விருந்தோம்பலில் முக்கிய பங்கு வகிப்பவை வாழையிலை விருந்து.நம் முன்னோர்கள் வாழையிலையின் மருத்துவப்பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப்பண்பாடு காலந் தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலை போற்றி பெருமிதம் கொள்வோம்.

திறவுச்சொல்:-

கடையேழுவள்ளல்கள் ,தமிழர் பண்பாடு, விருந்தோம்பல், கலைகள், திருவிழா

துணைநூற்பட்டியல்:-

திருவள்ளுவர், பரிமேலழகர், மாணிக்கவாசகர் பதிப்பகம் சென்னை-18
புலியூர்கேசிகன், கலித்தொகை மூலமும், உரையும் சாரதா பதிப்பகம் சென்னை-14
தொல்காப்பியம், பொருளதிகாரம் கழக வெளியீடு
புலியூர்கேசிகன், புறநானூறு சாரதா பதிப்பகம் சென்னை-14
Https://www.projectmadurai.org
www.Sangacholai.in www.tamilvu.org

********* ********* ********** ********* ********* ********** ********** **********